DOLPHIN ®
Primary books

டால்பின் வழங்கும்

# பாட்டுப் பாட வா...

பாகம் : 1



Paddu Pada Vaa Part - 1

# இறைவன்



இறைவா! உன்னை வணங்கிடுவேன்
இன்றும் என்றும் போற்றிடுவேன்
அம்மா அப்பா நலம் காக்க
அன்பாய் உன்னை வேண்டிடுவேன்
நலமும் புகழும் நான் பெறவே
நாளும் உன்னை பணிந்திடுவேன்.

# கடமை





காலையிலே எழுந்திரு

கடவுளை வணங்கிடு

காலைக்கடனை முடித்திடு

கையில் புத்தகம் எடுத்திடு

கல்விச் சாலை சென்றிடு

கருத்தாய் பாடம் படித்திடு.





# சுத்தம்



கிழிந்த சின்ன காகிதம்
கிடக்கு இங்கே தரையிலே
கிட்டு நீயும் எடுப்பாய்
எட்டி உள்ள கூடையில்
கிட்ட வந்து போடுவாய்
சுத்தம் நீயும் காப்பாய்.





# தோசையம்மா தோசை



தோசையம்மா தோசை
அம்மா சுட்ட தோசை
அரிசி மாவும் உளுந்த மாவும்
கலந்து சுட்ட தோசை
அப்பாவுக்கு நாலு
அம்மாவுக்கு மூணு
அண்ணனுக்கு ரெண்டு
பாப்பாவுக்கு ஒன்னு
தின்ன தின்ன ஆசை
திருப்பிக் கேட்டா பூசை.



டால்பின் வழங்கும்

# பாட்டுப் பாட வா...

பாகம் : 1 & பாகம் : 2





அச்சிட்டு வெளியிடுவோர் :

**சேகர் பப்ளிசர்ஸ்**

3/1078/2, மீனம்பட்டி, சாத்தூர் ரோடு,
சிவகாசி - 626189.

போன் : 04562 274132

பேக்ஸ் : 04562 274133

இ. மெயில் : sekharuma@hotmail.com

இணையதளம் : www.sekardolphin.com

An ISO 9001:2000 Certified Company

ISBN 978-93-81240-33-5